**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.564/2025 –** P.W.11

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. ரமேஷ் | Father's Name. ராஜகோபால் |
| Village : வேளாங்கண்ணி | Age: 55 |
| Date :28.07.2026 | தொழில் : சிறப்பு உதவி ஆய்வாளர் |

நம்பர்: 9498164067

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **28th day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th **day of July 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜர் )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது, வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.10.2020ம் தேதி வெளிப்பாளையம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, நாகப்பட்டினம், அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று, அங்கு சென்று உள்நோயாளியாக

சிகிச்சையில் இருந்த தங்கபொன்னு (எ) பர்லுநிஷா, க/பெ. முகமது செய்து அலி, அரசமரத்ததெரு, மஞ்சக்கொல்லை என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.1604/2020, இதச பிரிவுகள் 279, 337, 304(எ) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். தற்போது காட்டப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்ததுதான். புகார் வாக்குமூலம் **அதசாஆ.1.** முதல் தகவல் அறிக்கை **அதசாஆ.2.** பின்பு வழக்கு கோப்புகளை ஆய்வாளரின் மேல் விசாரணைக்காக வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்ததுபோல், அசா.1றை விசாரணை செய்து எந்தவித புகார் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசாஆ.1றான புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அசா.1றுடையதே இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் அறிவுரைப்படி, இந்த விபத்து எதிரியின் தவறுகையால் ஏற்பட்டதுபோல இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை என்னால் நிலையத்தில் வைத்து உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை நிலையத்தில் வைத்து தவறாக உருவாக்கப்பட்டதால்தான் நான் பதிவு செய்ததாக சொல்லப்பட்ட அன்றே அவைகளை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்காமல், பின்னிட்டு காலம் கடந்து அனுப்பிவைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.28 17:12:05 +0530